மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 20 வியாழக்கிழமை 05.12.2024 கதிர் 71



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




# வெள்ளத் தடுப்பணையை திறக்கக் கோரி வயலில் இறங்கி விவசாயிகள் போராட்டம்!





தென்மராட்சி, டிச. 05

வயல்களில் தேங்கியுள்ள நீர் காரணமாகப் பயிர்கள் அழியும் அபாயம் உள்ளதால், தொண்டமனாறு தடுப்பணையைத் திறந்து வயல்களில் இருந்து நீர் வழிந்தோட வகைசெய்யுமாறு கோரி விவசாயிகள் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, வரணி, நாவற்காடு கிராம விவசாயிகளே இன்று நீர் நிறைந்த வயலில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

6➤

## வருகை



அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ இன்று அதிகாலை இலங்கைக்கு வருகை தந்தார்.

இம் மாதம் 3 ஆம் தி-கதி முதல் 10 திகதி வரை இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவுகள் ஆகிய இடங்களுக்கு டொனால்ட் லூ உத்தியோக பூர்வ பயணங்களை மேற்கொள்ளவிருக்கிறார். (ஐ)

# 2025இன் முதல் நான்கு மாதங்களுக்கு ரூபா 1,402 பில்லியன் நிதி ஒதுக்கீடு!

## -தற்காலிக பட்ஜெட் இன்று சமர்ப்பிப்பு-

**கொழும்பு, டிச. 05**

**2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு - ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியினுள் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள், அரச சேவைகளை கொண்டு செல்வதற்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டு முன்மொழிவு இன்று சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்னாயக்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.**

6➤



# முதலீட்டு வாய்ப்பில் இனி அரசியலுக்கு இடமில்லை

## ஜனாதிபதி திட்டவட்டம்



கொழும்பு, டிச. 05

புதிய முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகையில் அரசியல் பக்கச் சார்பு அடிப்படையில் சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற எந்தவொரு அரசியல் அழுத்தங்களுக்கும் இனிமேல் இடமில்லை என்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மையுடன் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் உருவாகியுள்ளது எனவும் ஜனாதிபதி

6➤

# சுழிபுரத்தில் விபத்து ஒருவர் சாவு மற்றொரு மாணவன் படுகாயம்!

யாழ்ப்பாணம், டிச. 05

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மாணவன் ஒருவர் உயிரிந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை யாழ்ப்பாணம், சுழிபுரம் சந்திப்பகுதியில் இடம்பெற்றது. சுழிபுரம் விக்டோரியா கல்லூரியின் கணிதப் பிரிவில் கல்வி கற்கும் மாணவனான முருகசோதி சிறிபானுசன் என்பவரே உயிரிழந்துள்ளார். அவருடன் மோட்டார் சைக்கிளில் வந்த 15 மதிக்கத்தக்க மாணவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, சம்பவத்தில் உயிரிழந்த மாணவனும், படுகாயமடைந்த வரும் மோட்டார் சைக்கிளில் மூளாய் நோக்கி பயணித்-துள்ளார். சுழிபுரம் சந்தியில் வேகக்கட்டுபாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்சார கம்பத்துடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

6➤

## அமெரிக்கா இராஜாங்க திணைக்களத்தின் உதவி செயலாளர் டொனால்ட் லு வருகை!

கொழும்பு, டிச. 05

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகத்தின் உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லு, இன்று இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

டொனால்ட் லுவுடன் அமெரிக்கா இராஜாங்க திணைக்களத்தின் மற்றுமொரு உயர் அதிகாரியும் இன்று அதிகாலை 2.55 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகள் குழு ஒன்றும், இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குழு ஒன்றும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து டொனால்ட் லு தலைமையிலான குழுவினரை வரவேற்றனர்.

நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், ஊழலுக்கு எதிராகப் போராடுதல், மக்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்து தல் மற்றும் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டு முயற்சிகளை முன்னெடுப்பதே டொனால்ட் லுவின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும் என அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலகம் கடந்த 02 ஆம் திகதி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் டிசம்பர் 10ஆம் திகதி வரை இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்ய உள்ளார்.

பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு தெற்காசியாவின் முக்கிய பங்காளிகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே இந்த விஜயத்தின் நோக்கமாகும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது. (ஐ)

## லொஹான் ரத்வத்தவுக்கும் மனைவிக்கும் பிணை அனுமதி!

கொழும்பு, டிச. 05

பதிவு செய்யப்படாத சொகுசுக் கார் ஒன்றைத் தம்வசம் வைத்திருந்த சந்தேகத்தின் பேரில், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தயும், அவரது மனைவி ரஷி பிரபா ரத்வத்தயும் இன்று நிபந்தனையுடன் கூடிய பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி ஆகியோர் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக வடிவமைக்கப்பட்ட பதிவு செய்யப்படாத சொகுசுக் கார் ஒன்றை வைத்திருந்தமை தொடர்பான வழக்கு இன்று காலை நுகேகொட நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இருவருக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மிரிஹான எம்புல்தெனிய சாலாவ வீதியில் அமைந்துள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவி ரஷி பிரபா ரத்வத்தவுக்குச் சொந்தமான வீட்டில் இருந்து இலக்கத் தகடுகள் இல்லாத சொகுசு கார் ஒன்று அண்மையில் கண்டு பிடிக் கப்பட்டிருந்தது. அந்தக் கார் தொடர்பில் மிரிஹான பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர், அது சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்ட ஒன்று என தெரியவந்துள்ளது.

ஒக்டோபர் 30 ஆம் திகதி, லொஹான் ரத்வத்தே, அந்தக் காரைப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், மிரிஹான பொலிஸாரால் கட்டுகஸ்தோட்டையில் வைத்து கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அதன் பின்னர் லொஹான் ரத்வத்தவின் மனைவியான ரஷி பிரபா ரத்வத்தேயும் நவம்பர் 4ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பெரமுனவின் நிர்வாகச் செயலாளர் கைது!



கொழும்பு, டிச. 05

பொதுஜன பெரமுன வின் நிர்வாகச் செயலாளர் ரேணுகா பெரேரா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற மாவீரர் நாள் நிகழ் வுகள் குறித்துப் போலியான தகவல்களைப் பரப்பி இன முரண்பாடுகளைத் தோற் றுவிக்க முனைந்தார் என்ற குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொட்டிஹாவத்த பகுதி யில் உள்ள அவரது வீட் டில் வைத்து குற்றப் புல னாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# சட்டவிரோத கட்டடங்கள் பற்றிய தகவல்கள் வந்து குவிகின்றன!

### - ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு -

கிளிநொச்சி, டிச. 05

வடக்கு மாகாணத்தில் வெள்ள வாய்க்கால்களை மறித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணித்தமையைத் தொடர்ந்து அதிகளவிலான தகவல்கள் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. அவற்றை உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி அவர்கள் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியிருக்கின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இடர் தடுப்பு நடவடிக்கைகளில் சிறப்பாகச் செயற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முன்களப் பணியாளர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஆளுநர் நா. வேதநாயகன் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த மாதம் சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட இடர் தடுப்பு நடவடிக்கைகளில் சிறப்பாகச் செயற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் முன்களப் பணியாளர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் 302 பேரும், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் 37 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் 44 பேரும், மன்னார் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் 80 பேரும், வவுனியா மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் 63 பேரும் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், மன்னார் மாவட்டச் செயலர் கே.கனகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் ஆகியோரும், ஒவ்வொரு மாவட்டங்களினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், "நாம் எவ்வாறான தயார்படுத்தல்களுடன் இருந்தாலும் இடர்கள் வரும் போது சில வேளைகளில் அவற்றைச் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்படும். 4 நாள்களில் சுமார் 500 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றது. சகல இடங்களும் வெள்ளக்காடாகியது. ஆனாலும், சில நாள்களிலேயே வழமைக்கு திரும்பும் வகையில் நீங்கள் அனைவரும் பணியாற்றியிருக்கின்றீர்கள்.

உங்கள் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியிருந்தாலும் நீங்கள் நித்திரை முழித்து இரவிரவாக மக்களைப் பாதுகாக்கக் களத்தில் நின்றிருக்கின்றீர்கள். அப்படிச் செயற்பட்ட உங்களை பாராட்டி மதிப்பளிப்பது எமது கடமை. இது உங்களுக்கு உற்சாகமளிக்கும்.

சவால்களை நாம் சந்திக்கும்போதுதான் எமது சேவைகள் இன்னமும் மேம்படும்.

இந்த இடரிலிருந்து நாங்கள் கற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் எமது நடவடிக்கைகளை இப்போதிலிருந்தே ஆரம்பிக்கவேண்டும். நாம் அவற்றை மீளாய்வு செய்யவேண்டும்.

சரியான தீர்மானங்களை விரைந்து எடுக்கவேண்டும். தலைமைத்துவத்துக்கு அதுதான் அழகு. விரைந்து தீர்மானங்களை எடுக்கத்தவறினால் பிரச்சினைகளுக்குத்தான் முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் பருவகால மழைக்கு முன்னதாக வெள்ள வாய்க்கால்களைத் துப்புரவு செய்வதை எமது வருடாந்த செயற்றிட்டத்தில் உள்ளடக்குவதன் ஊடாக முன்னாயத்த நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுக்கலாம்.

இதேவேளை மத்தி, மாகாணம் என்று பாராது இவர்கள் எமது மக்கள் என்ற அடிப்படையில் இந்த இடர் நடவடிக்கையின் போது சகல திணைக்களங்களும் செயற்பட்டன. அது வரவேற்கப்பட வேண்டியதுடன், எதிர்காலத்திலும் தொடர வேண்டும்" என்று குறிப்பிட்டார். (ஐ-12)










# "உறவுகளை நினைவுகூரும் உரிமை அனைவருக்கும் உண்டு" அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவே என்கிறார் அமைச்சர்!



கொழும்பு, டிச. 05

"உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூரும் உரிமை அனைவருக்கும் உண்டு. வடக்கு, கிழக்கு, தெற்கு உட்பட சகல மாகாணங்களுக்கும் இந்த உரிமை உண்டு என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளது" என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும், வடக்கு - தெற்குக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் மூலம் பொய் பிரசாரங்களை மேற்கொண்டவர்களே, கைது செய்யப்பட்டதாகவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில், எதிர்க்கட்சியினர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையில் "வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகளை திட்டமிட்ட வகையில் திரிபுபடுத்தி வடக்கு - தெற்குக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட இருவர் புதிய ஜனநாயக முன்னணியின் செயற்பாட்டாளர்களே.

அத்துடன் மாவீரர் தின நிகழ்வுகளை வைத்து இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை உருவாக்கும் வகையில், சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை பதிவேற்றம் செய்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். வடக்கில் ஒருவரும் பத்தேகம, மருதானை, பொரலஸ்கமுவ ஆகிய பகுதிகளில் ஏனையோரும் கைதாகியுள்ளனர்.

ஊடகங்களை அடக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாது. ஒருவரின் உரிமை மற்றொருவருக்கு இடையூறாக அமையக் கூடாது என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கடந்த இருவார காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற கைதுகள் மற்றும் அதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டியவை. இனவாதத்துக்கு எதிராகவே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் மக்கள் அதனை வழங்கினர். அந்த வகையில் இனவாதம் மற்றும் மதவாதத்திற்கு எதிராகவே நாம் செயற்படுவோம். இக்காலங்களில் மாவீரர் தின அனுஷ்டிப்பு பிரதான பேசுபொருளாக மாறியுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் கொடி, சின்னங்களைப் பயன்படுத்த ஒரு போதும் இடமளிக்க முடியாது. அண்மையில் கல்கமுவ பகுதியில் நான் தெரிவித்த விடயத்தை திரிபுபடுத்தி பொய்யான வகையில் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த பொய்யான செய்தி தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை மாவீரர் தினம் அனுஸ்டிக்கப்பட்டது. இரு மாகாணங்களிலும் 244 மாவீரர் தின அனுஷ்டிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன . அவற்றில் 10 நிகழ்வுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஞாபகச் சின்னங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அல்லது அவற்றை ஊக்குவிக்கும் வகையில் சில விடயங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி நீதிமன்றத்துக்கும், பருத்தித்துறை மற்றும் யாழ்ப்பாண நீதிமன்றங்களுக்கும் பொலிஸார் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். அதேபோன்று சுன்னாகம் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

2018 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தின புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை திரிவுபடுத்தி அவை இந்த ஆண்டு மாவீரர் தினம் என தெற்கில், சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டன. புதிய சட்டங்களை இயற்றியாவது தேசிய நல்லிணக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார். (ஐ-12)

## அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை நாடாளுமன்றத்தில் நீதி அமைச்சர் தெரிவிப்பு!

கொழும்பு, டிச. 05

அரசியல் கைதிகள் மற்றும் சாட்சிகள் இல்லாமல் நீண்ட காலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்திருக்கும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, அதற்காக ஓரிரு மாதங்கள் எமக்கு சந்தர்ப்பம் தாருங்கள் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான இரண்டாம் நாள் விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன் தனது உரையின் போது கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.



அரசியல் கைதிகளை விடுவிப்பதாக நாங்கள் எமது கொள்கைஉரையிலும் வாக்குறுதி அளித்திருக்கிறோம். என்றாலும் அதனை ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்தில் செய்வது கடினம். அதனால் சம்பந்தப்பட்ட சட்ட பிரிவினருடன் கலந்துரையாடி மிக விரைவில் அரசியல் கைதிகள் அல்லது சாட்சி இல்லாமல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று ஊழல் மோசடி தொடர்பிலும் விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம். குறிப்பாக ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-09)

## நாட்டில் இன்சுலின் தட்டுப்பாடு 3 வாரங்களில் நீக்க நடவடிக்கை!

கொழும்பு, டிச 05

நாடு முழுவதுமுள்ள வைத்தியசாலைகளில் மிக்ஸ்டார்ட் இன்சுலின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 85,000 மிக்ஸ்டார்ட் இன்சுலின் யூனிட்டுகளை இந்த வாரம் கொள்வனவு செய்ய சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

வைத்தியசாலைகளில் தற்போது நிலவும் இன்சுலின் தட்டுப்பாட்டு பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக மருத்துவ விநியோக பிரதி பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார். "பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்க்க நாங்கள் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளோம். 7,500 யூனிட் மிக்ஸ்டார்ட் இன்சுலின் கொள்வனவுக்கான ஆரம்ப நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும் 5,000 யூனிட்கள் விரைவில் கிடைக்கவுள்ளன. இதற்கு மேலாக இந்த வாரத்திற்குள் 85,000 அலகுகளை கொள்வனவு செய்ய நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். இது தற்காலிக பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய போதுமானதாக இருக்கும்" என்றும் டாக்டர் விஜேசூரிய மேலும் கூறியுள்ளார்.

மேலும், கொள்வனவு நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதத்தினால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நிலைமையை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூன்று வாரங்களுக்குள் விநியோகம் இயல்பு நிலைக்குத் திரும்பும் என அவர் குறிப்பிட்டார். (ஐ-04)

## தேசியப் பட்டியலில் காஞ்சன!

கொழும்பு, டிச 05

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் மூலமாக நிரப்பப்படாதிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகரவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப்பட்டியல் தொடர்பான இறுதித் தீர்மானம் நாளை வெள்ளிக்கிழமை தேர்தல்கள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். (ஐ)

## சட்டவிரோத துப்பாக்கி தொழிற்சாலை வர்த்தகர் ஒருவர் இரத்தினபுரியில் கைது!

இரத்தினபுரி, டிச 05

சட்டவிரோதமாகத் துப்பாக்கி தொழிற்சாலை ஒன்றை நடத்தி வந்த வர்த்தகர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் இரத்தினபுரி, ரக்வானை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் 49 வயதான ரக்வானை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் எனப் பொலீஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேக நபரிடமிருந்து துப்பாக்கிகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ-04)

## வீடுகள் கையளிப்பு!

கொழும்பு, டிச. 05

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மடிவெல வீடமைப்புத் தொகுதியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வீடுகளைத் திரும்பக் கையளித்துள்ளனர்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீரவின் கருத்துப்படி, புதிதாக தெரிவு செய்யப்பட்ட நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மடிவெல வீடமைப்புத் தொகுதியில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், நாடாளுமன்றத்துக்குத் தெரிவான இருபது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னர் ஒதுக்கப்பட்டிருந்த வீடுகளே மீளவும் வழங்கப்பட்டுள்ளன என்று ரோஹணதீர மேலும் தெரிவித்தார். (ஐ-12)

## மன்னாரில் 14 பேர் கைது!

மன்னார், டிச. 05

தலைமன்னார் கடற்பரப் பினுள் அத்து மீறி உள்நுழைந்து அனுமதியின்றிக் கடற்றொழிலில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மன்னார் கடற்பரப்பில் வைத்து அனுமதியின்றி மீன் பிடித்தார்கள் என்ற சந்தேகத் தின் பேரில் இந்தப் 14 பேரும் நேற்றிரவு கைது செய்யப்பட்ட தாகக் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சமயம் அவர்கள் பயன்படுத்திய இரண்டு இழுவைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும், கைது செய்யப்பட்ட மீனவர்களும், கையகப்படுத்தப்பட்ட படகுகளும் தலைமன்னார் கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படை ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-03)

# கள்ளக்குறிச்சி வழக்கை சி.பி.ஐ. விசாரிப்பதில் தி.மு.க. அரசுக்கு என்ன பயம்

## - கேள்வி எழுப்பிய எடப்பாடி பழனிசாமி -

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதத்தில் கள்ளச்சாராயம் அருந்தியதால் 60-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இச்சம்பவம் தொடர்பான வழக்கு முதலில் சி.பி.சி.ஐ.டி. வசம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அ.தி.மு.க., பா.ம.க., பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததையடுத்து இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், கள்ளச் சாராய வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றி உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து, தமிழ்நாடு அரசு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சுப்ரீம் கோர்ட்டில் சவாலுக் குள்ளாக்கியுள்ளது. இதனை எதிர்த்து, சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்தார்.

எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையின் முக்கிய அம்சங்களாக கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கில் சி.பி.ஐ. விசாரணைக்கு எதிராக தி.மு.க. அரசு மேல்முறையீடு செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு மேல்முறையீடு செய்வதன் நோக்கம் விசாரணையை தாமதப்படுத்தி, வழக்கை முடக்குதல் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசின் அலட்சியமான நிர்வாகம் தான் உயிரிழப்புகளுக்கு காரணம் என்றும், காவல்துறையின் விசாரணை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.



இதேவேளை அ.தி.மு.க., இந்த வழக்கில் நீதியை நிலைநாட்டுவதற்காக தொடர்ந்து சட்டப் போராட்டத்தில் ஈடுபடும் எனவும் உறுதிபட தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் முதலீடு செய்வது இலாபகரமானதாக இருக்கும்

## ரஷ்ய அதிபர் புதின் தெரிவிப்பு!

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்று வந்தது. இந்த மாநாட்டில், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் பேசுகையில், இந்தியாவின் வளர்ச்சித்துறைகள் மற்றும் பிரதமர் மோடியின் முயற்சிகளை பாராட்டினார்.

"இந்தியாவில் சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்குவது கவனத்திற்குரியது.

பிரதமர் மோடியின் 'மேக் இன் இந்தியா' திட்டம் பாராட்டத்தக்கது. "இந்தியாவில் நிலையான அரசியல் மற்றும் பொருளாதார சூழலை பிரதமர் மோடியின் தலைமையிலான அரசு உருவாக்கியுள்ளது. 'இந்தியாவுக்கு முதலில் வாருங்கள்' என்ற கொள்கை மூலமே இது சாத்தியமாகியிருக்கிறது.

இந்தியாவில் முதலீடு செய்வது லாபகரமாக இருக்கும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்."

ரஷியாவில் விவசாயம் உள்ளிட்ட துறைகளில் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதனால், பொருட்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகளை விரிவுபடுத்துவது அவசியமாக உள்ளது.

"கடந்த ஆண்டு மட்டும், 66 பில்லியன் டாலர் மதிப்பில் தானியங்களை ஏற்றுமதி செய்துள்ளோம்," என்றார் புதின்.

இந்நிலையில் இந்தியாவின் அழைப்பை ஏற்று, ரஷ்ய அதிபர் புதின் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியா வர திட்டமிட்டு உள்ளார்.

அவரது இந்த பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் பயன்தரக்கூடிய பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு எதிராக இயற்றப்படவிருக்கும் சட்டம்

## ஆப்கான் கிரிக்கெட் வீரர் ரஷித் கான் விமர்சிப்பு!

தலிபான் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், ஆப்கான் பெண்களுக்கெதிராக பல கடுமையான விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. இப்போது, பெண்களுக்கான மருத்துவப் படிப்புகளை தடையிட உள்ளதாக தகவல்கள் வெளியானது.



இந்த முடிவுக்கு பிரபல ஆப்கான் கிரிக்கெட் வீரர்கள் ரஷித் கான் மற்றும் முகமது நபி கடும் விமர்சனம் தெரிவித்துள்ளனர்.

ரஷித் கான் தனது கருத்தில் கூறியதாவது:

"இஸ்லாமியக் கொள்கைகளின் அடிப்படையில் ஆண், பெண் இருவருக்கும் கல்வி சமமாக முக்கியத்துவம் வாய்ந்தது.

பெண்களுக்கு கல்வியைத்தடை செய்து, அவர்களது உரிமையை பறிப்பது ஆப்கான் சமூகத்தையும், வருங்கால தலைமுறையையும் பாதிக்கும்.

மருத்துவத் துறையில் பெண் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறை இருந்தபோது, இந்தத் தடை இன்னும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.


பெண்கள் தங்கள் கல்வி உரிமையை மீட்டெடுக்கும் நாள் வர வேண்டும். சமூக பொறுப்பாகவே, அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டும்." என ரஷித் கான் தலிபான் அரசுக்கு தனது கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

"இந்த முடிவை மாற்றி, ஆப்கான் பெண்களுக்கு கல்வி உரிமையை மீண்டும் வழங்க வேண்டும். இது எங்கள் மதக்கொள்கைகளுக்கும் நம்பிக்கைக்கும் நீதியைக் கொடுக்கும் செயல்." எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.






# இன்று வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது பி.எஸ்.எல்.வி. சி-59 ராக்கெட்!



சூரியனை ஆய்வு செய்வதற்காக ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் உருவாக்கிய 'புரோபா-3' என்ற இரண்டு இணை செயற்கைக்கோள்கள், சூரியனின் ஒளிவட்டப் பகுதியை ஆராய்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் 550 கிலோ எடையுள்ள செயற்கைக்கோள்கள் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டா, சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. சி-59 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டன.

முதலில், பி.எஸ்.எல்.வி. சி-59 ராக்கெட் புதன் கிழமை மாலை 4.08 மணிக்கு ஏவப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

சிறிய தொழில்நுட்ப காரணங்களால், ஏவுதல் வியாழக்கிழமை ஒத்திவைக்கப்பட்டது.

இன்று (வியாழக்கிழமை), பி.எஸ்.எல்.வி. சி-59 ராக்கெட் வெற்றிகரமாக மாலை 4.04 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டா மையத்தில் இருந்து விண்ணில் பாய்ந்தது. தற்போது, விண்ணில் இந்த செயற்கைக் கோள்களை நிலைநிறுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வு சூரிய ஆராய்ச்சியில் புதிய முன்னேற்றமாகக் கருதப்படுவதோடு , மேலும் இது அஸ்ட்ரோபிஸிக்ஸ் மற்றும் விண்வெளி அறிவியலுக்கு முக்கியமான தகவல்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# அந்த மூன்று நாட்கள்!

இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் பெண்களின் மாதவிடாய் பற்றி பேசினாலே தயக்கமும் கூச்சமும் கொள்ளும் மனநிலையில்தான் பெரும்பான்மையானோர் இருக்கின்றனர். எனவேதான் மாதவிடாய் பற்றி வெளிப்படையாக பேசுவதும், அந்நாட்களில் பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய சுகாதார உரிமையைப் பறைசாற்றுவதும் 'தனிநபர் உரிமை'என்பதைத் தாண்டி சமூகக் கடமையாக மாறியிருக்கிறது.

நல்ல உடல்நலமுள்ள பெண்ணின் உடலில் ஏற்படும் உயிரியல் செயல்பாடே மாதவிடாய். ஆனால் இயற்கையாக நடைபெறும் ஒன்றை 'தீட்டாக' மாற்றியதன் பின்னணியில் மத ஒடுக்குமுறைகளும் பங்கு வகித்துள்ளன. தமிழர்கள் குறிப்பாக இந்துக்கள் மாதவிடாய் என்பதை சுத்தமற்ற அதாவது அழுக்கான ஒரு நோய் போலக் குறிப்பிடுவதை இன்றளவும் காண முடிகிறது. "நாங்கள் பாரம்பரிய இந்துக்கள்" என பெருமையாக சொல்லிக் கொள்ளும் சிலர் அதைப்பற்றி பேசுவதையே தீட்டு என்றும் கூறுகின்றனர்.

பெண்கள் மாதவிலக்காகும் 3 நாட்களும் வீட்டிற்குள்ளேயே முடங்கி இருக்க வேண்டும், உப்பு, ஊறுகாய் போன்ற பொருட்களில் கை வைக்ககூடாது, தனியான பாத்திரங்கள் பயன்படுத்த வேண்டும், ஆண்களைப் பார்க்கக்கூடாது, சமையல் செய்யக்கூடாது மற்றும் கோயில், பண்டிகை போன்ற மத சடங்குகளில் பங்குபெறக்கூடாது போன்ற கட்டுப்பாடுகளை விதிக்கும் வழக்கம் இன்றும் அவர்களால் தொடரப்படுகிறது. இப்படிப்பட்ட பிற்போக்குத்தனம் மிகுந்த மோசமான சூழ்நிலைகளில், மாதந்தோறும் பெண்களின் மாதவிடாய் முள்ளின் மேல் நடப்பது போலவே நிகழ்கிறது.

இன்றும் சில கிராமப்புறங்களில் பெண்கள் மாதவிடாய் நேரத்தில் தனியாக வீட்டின் பின்புறத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். அவர்கள் தரையில்தான் படுக்க வேண்டும், தலையணை பயன்படுத்தக் கூடாது, எழுந்தவுடன் குளித்துவிட்டுத்தான் வெளியில்வர வேண்டும்போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இவ்வாறு கட்டுப்பெட்டித்தனமாக பெண் களை பொத்தி வைத்து, அவர்களுக்கு மனதளவில் அதிக அழுத்தத்தைக் கொடுப்பதால், 'தான் ஏன் ஒரு பெண்ணாக பிறந்தோம்' என எண்ணி தன்னைத் தானே வெறுக்கும் மனநிலைக்கு கொண்டு வந்துவிடுகிறார்கள்.

பெரும்பாலும் பள்ளிகள், கல்லூரிகள், பெண்கள் வேலை பார்க்கும் இடங்கள்- இவற்றில் பெண்களுக்குத் தேவையான அடிப்படை சுகாதார வசதிகள் முறையாக இருக்க வேண்டும். குறிப்பாக பெண்களுக்கான தனி கழிப்பறைகள், அவற்றில் தடையில்லா தண்ணீர் வசதி, மாதவிடாய் நேரங்களில் பயன்படுத்திய நாப்கின்களை அகற்றும் தொட்டிகள் (disposal bins) இருக்க வேண்டும்.

நாப்கின்களை அப்புறப்படுத்த முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் பல அரசு பள்ளிகளில் சுகாதாரமற்ற கழிவறைகளே இருக்கின்றன. மேலும் துர்நாற்றம் வீசக்கூடிய இந்தக் கழிப்பறைகள் இலவச தொற்றுநோய் வழங்கும் கூடமாகவே மாறியிருக்கின்றன. பெண்களின் வளர் இளம்பருவத்தில் இது போன்ற நோய்கள் பல சிக்கல்களை உருவாக்கிவிடுகின்றன. நோய்த்தொற்றைக் கண்டுணர்ந்து சரியான மருத்துவரை அணுகி உரிய சிகிச்சை எடுக்காவிட்டால் இது இனப்பெருக்க பாதை நோய்களுக்கு ஊற்றுக்கண் போல் ஆகிவிடுகிறது. இந்த காரணத்திற்காகவே இன்று மாணவிகள் மாதவிடாய் சமயத்தில் மூன்று நாட்கள் பள்ளி செல்ல விரும்பாமல் வீட்டில் இருப்பதை விரும்புகிறார்கள். பெண் குழந்தைகள் இவ்வாறு மாதம் மூன்று நாட்கள் பள்ளி செல்லாமல் இருப்பதால் அவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது.

> "மாதவிடாய் என்ற உடலியல் சார்ந்த இயற்கையான நிகழ்வை வைத்துப் பெண்களை இழிவாகப் பார்க்கும் கண்ணோட்டம் மாற, சமத்துவம் என்னும் சிந்தனையை அனைத்து வகையிலும் ஆண், பெண் இருபாலருக்கும் சிறு வயதிலிருந்தே கற்பிக்க வேண்டும்."

மேலும் பள்ளியில் நடைபெறும் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு போட்டிகளிலும் கலந்து கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் வலிமை இழப்பதால் அல்ல, "மாதவிடாய் நாட்களில் உன்னால் முடியாது, இப்படித்தான் இருக்க வேண்டும்" என சொல்லி சொல்லியே அவர்களை மூலையில் உட்கார வைத்துவிடுகிறார்கள்.

குறைந்த வருமானம் உள்ள நடுத்தர குடும்பப் பெண்களுக்கு மாதவிடாய் நேரங்களில் சுகாதாரமான நாப்கின்களை வாங்குவது இயலாததாகிறது. கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் இது போன்ற நேரங்களில் தனது தாயின் பழைய கிழிந்த புடவைகள், அப்பாவின் நைந்து போன வேட்டிகள் இவற்றை உபயோகப்படுத்துகின்றனர். அதை ஒரு முறை பயன்படுத்துவதே சுகாதாரக் கேடு. அவற்றை சுத்தம் செய்து உலர்த்தி மீண்டும் பயன்படுத்துவது மேலும் சுகாதார சீர்கேடுகளையே விளைவிக்கும். இதனால் பெண்ணுறுப்பின் வழியாக இனப்பெருக்க உறுப்பில் ஒவ்வாமை (infection) ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். அதுமட்டுமின்றி அசௌகரியமாக இருக்கும். நல்ல உடைகளை உடுத்த இயலாது. சுலபமாக தரையில் அமர இயலாது, எங்கே இரத்தம் கசிந்து அடுத்தவர் பார்த்துவிடுவார்களோ என்ற அச்சம் இருக்கும்.

நாடு முழுவதும் நல்ல தரமான நாப்கின்கள் அதிக விலை கொடுத்து வாங்க இயலாத நடுத்தர வர்க்கப் பெண்கள் பெரும்பாலும் பழைய துணிகளையே மாதவிடாய் நாட்களில் பயன்படுத்துகின்றனர்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள பெண்களுக்கே இந்நிலையென்றால் வீடுகள் இல்லாது சாலை ஓரங்களில் வசிக்கும் பெண்ககளின் நிலை இதைவிட மோசமாக இருக்கிறது. காரணம் அவர்களால் மாநகராட்சி பொது கழிப்பறைகளை மட்டுமே பயன்படுத்த முடிகிறது. அங்கே மோசமான நிலையில் கழிப்பறைகளும் தண்ணீர் தொட்டிகளும் இருப்பதால் அவர்களின் மாதவிடாய் நாட்களில் மிகவும் துயருறுகிறார்கள். இவ்வாறு ஏழை, எளிய பெண்களுக்கு வாழ்க்கையில் பணம் மட்டுமே சிக்கலில்லை, அவர்களின் சுகாதார உரிமையும் சிக்கலாகவே இருக்கிறது.

இன்றும் எல்லோருக்கும் எல்லாமும் சமமாக கிடைக்கபெறுவதில்லை. சுகாதாரத்திலும் ஏற்றத்தாழ்வு நிலையே இன்னுமும் நிலவுகின்றது என்பதே வேதனைக்குரிய செய்தி.

இன்று "பெண்களின் மாதவிடாய் என்பது தீட்டல்ல. அது உடலில் இயற்கையாக நடைபெறும் ஒரு நிகழ்வுதான்" என்பது விழிப்புணர்வு செய்தியாக ஓரளவு மக்களிடையே பரவியிருக்கிறது. ஆனால் மாதவிடாய் நாட்களில் பெண்களுக்கு ஏற்படும் சுகாதாரச் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வு இன்னும் வீரியமாக ஏற்படவில்லை என்பதே மருத்துவர்களின் கருத்தாக இருக்கிறது.

மாதவிடாய் என்ற உடலியல் சார்ந்த இயற்கையான நிகழ்வை வைத்து பெண்களை இழிவாகப் பார்க்கும் கண்ணோட்டம்மாற சமத்துவம்என்னும்சிந்தனையை அனைத்து வகையிலும் ஆண், பெண் இருபாலருக்கும் சிறு வயதிலிருந்தே கற்பிக்க வேண்டும். வளர்ந்த நாடுகளில் மாதவிலக்கு என்பது பெண்களின் உடல் வலியும், சுகாதாரப் பிரச்சினைகளும் மட்டுமே சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. ஆனால் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் மாதவிலக்கு என்பது பெண்களின் உளவியலுக்கும் சேர்த்து வலியைக் கொடுக்கும் பிரச்சனையாக இருக்கின்றது. இது மாற்றப்பட வேண்டும். சுகாதார விழிப்புணர்வு மட்டுமல்ல, மதவாதம் திணித்த பாரம்பரிய பழக்கங்களிலிருந்து விடுபடும் விழிப்புணர்வும் ஏற்படுவதே பெண்களின் வலிகளுக்கு நிரந்தர தீர்வாக அமையும்.

மாலைக்கதிர்
Maalaikkathir



# வவுனியா பல்கலைக்கழகத்தினர் ஆளுநருடன் கலந்துரையாடினர்!



யாழ்ப்பாணம், டிச. 05

வவுனியா பல்கலைக்கழகம் எதிர்கொள்ளும் சில சவால்கள் மற்றும் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் அ.அற்புதராஜா தலைமையிலான குழுவினர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை இன்று வியாழக்கிழமை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, பல்கலைக்கழ மாணவர் விடுதி மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான தங்குமிடம் தொடர்பில் ஆராயப்பட்டது. இவற்றை அமைப்பதற்கான காணிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் ஆளுநருடன் ஆலோசனை நடாத்தப்பட்டது.

மேலும் பல்கலைக்கழகத்துக்கான புதிய கட்டடங்களை அமைப்பதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு கொடையாளிகளின் உதவியைப் பெற்றுத்தருமாறு ஆளுநரிடம் கோரிக்கை ஒன்றைக் குழுவினர் முன்வைத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் தமது பல்கலைக்கழகத்தின் புதிய பீடத்தை ஆரம்பிப்பதற்கான திட்டமுன்மொழிவு தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடப்பட்டது.

இந்தச்சந்திப்பில் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் நடராஜா ராஜவிசாகன், வவுனியாப் பல்கலைக்கழத்தின் நிர்வாகப் பிரிவின் உதவிப் பதிவாளர் திருமதி தவகிருபா பிரணவமலர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-04)

## மாவீரர்தினம் பற்றி பொய் சொன்ன பெரமுனவின் செயலருக்குப் பிணை!

கொழும்பு, டிச. 05

வடக்கில் மாவீரர் நாள் அனுஸ்டிக்கப்பட்டமை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பொய்ப் பிரசாரம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ரேணுக பெரேராவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கி யுள்ளது.

இன்று காலை கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளரான ரேணுக பெரேரா கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, நீதவான் அவரைப் பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கினார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று இன்று காலை ரேணுக பெரேராவின் வீட்டுக்குச் சென்று வாக்குமூலமொன்றை பெற்ற பின்னரே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

(முன்னர் வந்த செய்தி 02ஆம் பக்கத்தில்)

## முதலீட்டு வாய்ப்பில் இனி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைய முதலீட்டுச் சபையின் உயர்மட்ட அதிகாரிகளுடன் இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மேலும், புதிய முதலீட்டு வாய்ப்புகளை வழங்குகையில் அரசியல் பக்கச்சார்பு அடிப்படையில் சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற எந்தவொரு அரசியல் அழுத்தங்களுக்கும் இனிமேல் இடமில்லை. நாட்டுக்கு உகந்த தூய்மையான முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முழுச் சுதந்திரத்தை இலங்கை முதலீட்டுச் சபைக்கு வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியல்ஸ்திரத்தன்மையை போலவே நாட்டுக்குள் நிதி ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, அது தொடர்பிலான பாரிய பொறுப்பு முதலீட்டுச் சபைக்கு உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

முதலீட்டுச்சபைக்கிருக்கும்பொறுப்பை சரியாக நிறைவேற்ற அர்ப்பணிக்க வேண்டும் என்றும், நாட்டுக்கு உகந்த முதலீடுகளை கொண்டு வருவதற்கு முதலீட்டுச் சபைக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி இதன்போது உறுதியளித்தார்.

முதலீட்டுச் சபையின் செயற்திறனை அதிகரிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் பெற்றுக்கொடுப்பதற்கும், புதிதாக ஐந்து முதலீட்டு வலயங்களை அடுத்த வருடத்தில் ஆரம்பிப்பது குறித்தும் கவனம் செலுத்தியிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத், பணிப்பாளர் நாயகம் ரேணுக வீரகோன் உள்ளிட்ட அதிகாரிகள் இதன்போது கலந்துகொண்டனர்.

## சுழிபுரத்தில் விபத்து ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தையடுத்து அங்கு கூடிய பொதுமக்கள் 1990 அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அழைப்பை ஏற்படுத்தியபோதிலும், அம்புலன்ஸ் உரிய நேரத்துக்கு அங்கு வரவில்லை என்றும், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையைத் தொடர்பு கொண்டு அம்புலன்ஸ் அனுப்புமாறு கேட்ட போது அவர்கள் நேரங்கடத்தும் விதத்தில் பேசிக்கொண்டிருந்ததாகவும் அங்கு நின்றவர்கள் கூறினர்.

சம்பவம் பற்றிக் கேள்வியுற்ற விபத்துக்குள்ளான மாணவர்களின் உறவினர்களும், நண்பர்களும் சம்பவ இடத்துக்கு வந்த பின்னர் காயமடைந்த இருவரையும் பட்டா ரக வாகனமொன்றில் ஏற்றி அங்கிருந்து மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். எனினும் 17 வயது மாணவன் உயிரிழந்திருந்தார். மற்றைய மாணவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேநேரம், விபத்து நடந்த இடத்துக்கு அம்புலன்ஸ் தாமதமாகவே வந்துள்ளது. அந்த நேரத்தில் விபத்துக்குள்ளாகிய மாணவனின் தாயார் மயங்கி விழுந்திருந்தமையால் அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல உதவுமாறு அங்கிருந்தவர்கள் கேட்ட போதும், "அவரை ஏற்ற நாம் வரவில்லை அவரை வேறு வாகனத்தில் அனுப்புங்கள்" என்று சொல்லி விட்டு அம்புலன்ஸில் வந்தவர்கள் திரும்பிச் சென்றதாகச் சொல்லப்படுகிறது.

சுழிபுரம் சந்திப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-77)

## 2025இன் முதல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடைக்கால கணக்கு முன்மொழிவின் படி, அடுத்து வரும் நான்கு மாதங்களுக்கான மொத்த உத்தேச ஒதுக்கீடு ரூபா ஆயிரத்து 402 பில்லியன் ஆகும்.

இந்த ஒதுக்கீடு அரசாங்கத்தின் இடைக்கால வாக்கெடுப்பு, தொடர் மற்றும் மூலதனச் செலவுகள், பொதுக் கடன் சேவைகள் மற்றும் கடன் மறுசீரமைப்புச் செலவுகள் என வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவு கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உத்தேச முன்மொழிவின் படி, அதிக பட்ச ஒதுக்கீடாக ரூபா. 220.06 போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனைய அமைச்சுக்களும், அவற்றுக்காக முன்மொழியப்பட்டுள்ள ஒதுக்கீடும் வருமாறு:

நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - ரூபா 186.02 பில்லியன், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு - ரூபா 170.47பில்லியன், சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சு - ரூபா 161.99 பில்லியன், பாதுகாப்பு அமைச்சு - ரூபா 142.95 பில்லியன், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு ரூபா 92 பில்லியன், விவசாய நீர்பாசனம், கால்நடைகள், விவசாய அமைச்சு - ரூபா 67.36 பில்லியன்.

சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்னாயக்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த உத்தேச ஒதுக்கீட்டின் மீதான விவாதம் இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளது. (ஐ-05)

## வெள்ளத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டமனாறு தடுப்பணையை மூடி வைத்திருப்பதால் தென்மராட்சி வரணிப் பிரதேச வயல்களில் தேங்கி நிற்கும் மேலதிக நீர் வடிந்து செல்ல முடியாமல் வயல் நிலங்களில் தேங்கி பயிரை அழிவடையச் செய்வதால் தாம் விரக்தியடைந்துள்ளதாகப் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.









இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2024 இல் வெளியிடப்பெற்றது.